தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.08.2013**

**23-ல் விவசாயிகள்  குறைகேட்புக் கூட்டம்**

கடலூரில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை .ஆக)23) நடைபெறவுள்ளது.
÷கடலூரில் உள்ள மாவட்ட வளர்ச்சிமன்றக் கூடத்தில் இக்கூட்டம் நடைபெறுகிறது.
÷கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ரா .கிர்லோஷ்குமார் தலைமை வகிக்கிறார். .வேளாண்துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்
÷எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், இக்கூட்டத்தில் பங்கேற்று தங்கள் பிரச்னைகளுக்கு தீர்வுக் காணலாம்.
÷விவசாயிகள், தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

தேசிய ஊரக வேலைத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை களையக் கோரி, உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், செவ்வாய்க்கிழமை அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
சங்கத் தலைவர் எஸ்ஆறுமுகம்.இ .கெம்பு தலைமை வகித்தார்., எம்எட்டியப்பன் . முன்னிலை வகித்தனர்நாகேஷ் வட்டச் .மாவட்ட துணைச் செயலாளர் எம் . .கே.செயலாளர் வி பெருமாள், விவசாயிகள் சங்க வட்ட துணைத்தலைவர் விமன்னார்கிருஷ.்ணன் உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து  கொண்டனர்.

ஊரக வேலைத்திட்டத்தில் 100 நாள்கள் முழுமையாக வேலை வழங்கவேண்டும், ரூ.148 கூலி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப் பட்டன.

**விவசாயத் தொழிலாளர் முற்றுகைப் போராட்டம்**

மதுரையில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டனர்.

நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்கக் கோரியும், வேலைக்கான பொருள்களை அளிக்கக் கோரியும், ஊராட்சி அளவில் வேலையைக் கண்காணிக்க மேற்பார்வையாளர் நியமிக்கக் கோரியும் மாநில அளவில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் போராட்டம் நடைபெற்றதுமதுரை . மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்துக்கு மார்க்சிஸ்ட் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் ராஅண்ணாதுரை தலைமை. வகித்தார்.

சங்க மாவட்டத் தலைவர் பூமிநாதன், செயலர் ரவி ஆகியோர் போராட்டத்தை விளக்கிப் பேசினர்மார்க்சிஸ்ட் புறநகர் மாவட்டச் செயலர் . ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் போராட்டத்தை வாழ்த்திப் பேசினர்.

முற்றுகைப் போராட்டத்தை அடுத்து அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுபின்னர் ., போராட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆக.23ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கேபழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள .எஸ். கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து

கொண்டு, தங்களது குறைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் யாமுத்தை.செ (வேளாண்மை)தெரிவித்தார்.

**வறட்சி நிவாரணம் வழங்க தென்னை விவசாயிகள் கோரிக்கை**

தென்னை விவசாயிகளுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டு, காய்ப்புத் திறனை இழந்த தென்னை மரம் ஒன்றுக்கு ரூ .2,000 வீதம் இழப்பீடு வழங்கக் கோரி, தேனியில் விவசாயிகள் சார்பில், மாவட்ட ஆட்சியர் கேபழனிச .எஸ்.ாமியிடம் மனு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் டி. கண்ணன், செயலர் சுருளிநாதன், பெரியகுளம் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் ஏலாசர் . :ஆகியோர் கூட்டாக ஆட்சியரிடம் அளித்த மனு விவரம்

பெரியகுளம் வட்டாரத்தில் ஜிகல்லுப்பட்டி., கெங்குவார்பட்டி, தேவதானப்பட்டி, செங்குளத்துப்பட்டி, குள்ளப்புரம், ஏவாடிப்பட்டி., முதலக்கம்பட்டி ஆகிய பகுதிகளில் 25 ஆயிரம் தென்னை மரங்களும், ஆண்டிபட்டி மற்றும் தேனி வட்டாரத்தில் உள்ள ஏத்தக்கோயில், கண்டமனூர், தப்புக்குண்டு, தாடிச்சேரி, வெங்கடாச்சலபுரம் ஆகிய இடங்களில் 25 ஆயிரம் தென்னை மரங்களும் வறட்சியால் பட்டுப்போய் காய்ப்புத் திறனை இழந்துள்ளன.

மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளின் பட்டியலில் தென்னை விவசாயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு இடம்பெறவில்லைதென்னை விவசாயத்தில் தொடர்ந்து . பல ஆண்டுகளாக இழப்பை சந்திக்கும் விவசாயிகள், மரங்களை வெட்டிவிட்டு மாற்றுப் பயிர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்வறட்சியால் தென்னை . விவசாயம் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து, காய்ப்புத் திறன் இழந்த மரம் ஒன்றுக்கு ரூ .2000 வீதம் இழப்பீடு வழங்க, மாவட்ட நிர்வாகம் அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்று அம்மனுவில் தெரிவித்துள்ளனர்.

**நாகையில் ஆகஸ்ட் 30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் ஆக .30-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் து.முனுசாமி தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார் .

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் புதன்கிழமை (ஆகஸ்ட் 21) மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் மழை பெய்யக் கூடும் எனவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தென்மேற்கு பருவ மழையின் காரணமாக கடந்த 2 மாதங்களில் தமிழகத்தில் 143 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

அடுத்த சில வாரங்களுக்கு மாநிலத்தில் மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி, வாழப்பாடியில் 20 மில்லி மீட்டர் மழையும், வால்பாறை மற்றும் புதுச்சேரியில் 10 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்: ராமதாஸ்**

பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.5-ஆக உயர்த்த வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:-

பால் உற்பத்தி ஒருபுறம் குறைந்துள்ள நிலையில், பாலுக்குப் போதிய விலையும் கிடைக்காததால் உற்பத்தியாளர்கள் மிகவும் துயரமடைந்துள்ளனர்.

தமிழகத்தில் கடந்த இரு ஆண்டுகளாக பால் கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை.

ஆனால் அண்டை மாநிலங்களான கர்நாடகத்திலும் கேரளத்திலும் கடந்த இரு ஆண்டுகளில் பால் கொள்முதல் விலை, இரு முறை உயர்த்தப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் ஒரு லிட்டர் பசும்பாலுக்கு கொள்முதல் விலையாக ரூ.24.50, ஊக்கத் தொகையாக ரூ.4.00 என மொத்தம் ரூ.28.50 வழங்கப்படுகிறது.

கேரளத்தில் ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ரூ.28.28 வழங்கப்படுகிறது.

ஆனால், தமிழகத்தில் ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ரூ.20-ம், எருமைப் பாலுக்கு ரூ.28-ம் கொள்முதல் விலையாக வழங்கப்படுகிறது.

இது பால் உற்பத்தியாளர்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும்.

எனவே பால் உற்பத்தியாளர்களின் நிலையை உணர்ந்து, பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்.

பசும்பால் விலையை லிட்டருக்கு குறைந்தது ரூ.5-ம், எருமைப் பால் விலையை லிட்டருக்கு ரூ.7-ம் உயர்த்த வேண்டும்.

பால் கொள்முதல் விலையை உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவை தமிழக அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

**உணவுப் பாதுகாப்பு மசோதாவுக்கு முலாயம் ஆதரவு**

நாடாளுமன்றத்தில் உணவுப் பாதுகாப்பு மசோதா வாக்கெடுப்புக்கு வரும்போது அதை ஆதரிக்க முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜவாதி கட்சி முடிவு செய்துள்ளது. அதே நேரம் அந்த மசோதாவில் சில மாற்றங்களை முன்வைக்கவும் அக்கட்சி திட்டமிட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சியின் மக்களவை உறுப்பினர்கள் கூட்டத்துக்கு தலைமையேற்றுப் பேசிய முலாயம் சிங் யாதவ், ""உணவுப் பாதுகாப்பு மசோதா வாக்கெடுப்புக்கு வந்தால் நாம் அதை ஆதரிப்போம்.

இருந்தாலும், இந்த திட்டத்தை இன்னும் சிறப்பாக்கும் வகையில் சில மாற்றங்களை அவையில் முன்மொழிவோம்.

விவசாயிகளின் விளைபொருள்களுக்கு சரியான விலை கிடைப்பதை உறுதி செய்வது, உணவில் ஊட்டச்சத்தை அதிகரிக்க அரிசியுடன் பருப்பு வகைகளை வழங்குவது, ஒவ்வொரு குடும்பத்துக்கும் கூடுதலாக உணவு தானியங்கள் வழங்குவது ஆகிய கோரிக்கையையும் முன்வைப்போம்" என்று கூறினார்.

முன்னதாக உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் மற்றும் நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கமல் நாத் ஆகியோர் திங்கள்கிழமை முலாயம் சிங் யாதவைச் சந்தித்து உணவுப் பாதுகாப்பு மசோதாவுக்கு அவரது ஆதரவைக் கோரினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.08.2013**

## விவசாய மலர்

### ஊட்டச்சத்து நிர்வாகம் ஒரு உடனடித்தேவை

நைட்ரஜன் (யூரியா போன்றவை) உரங்களுக்கு விவசாயிகள் அளித்துவரும் முக்கியத்துவம் என்.பி.கே. என்ற ஊட்டச்சத்துக்களின் வரிசையில் பி மற்றும் கே எனப்படும் பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசிய உரங்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதன் முக்கிய காரணம் ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த அறியாமையே.

இதில் அதீத நைட்ரஜன் உரப்பயன்பாடு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பதிலாக குறைந்த அளவே பயிர்களால் உறிஞ்சப்பட்டு, மிகுதிப்பகுதி நிலத்தில் தங்கிவிடுகின்றது. இது மண்ணின் தன்மையை பெரிதும் மாற்றி அமைக்க வழிகோலுகிறது. சமச்சீரற்ற சாம்பல்சத்து (பொட்டாசியம்) நிர்வாகம் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் பிரச்னையை அதிகரித்து விளைச்சலை பெரிதும் பாதிக்கிறது. இந்த பேரூட்டச் சத்துக்களைத்தவிர மிக இன்றியமையாத நுண்ணூட்டச் சத்துக்களான கால்சியம், கந்தகம், துத்தநாகம், இரும்பு, போரான், மாங்கனீசு மற்றும் தாமிரம் போன்றவை பயிர்களுக்கு மிகக் குறைந்த அளவே தேவைப்பட்டாலும் அவற்றின் பங்கு விளைச்சலை உயர்த்துவதில் மகத்தானது என்பது விவசாயிகளின் மத்தியில் சரிவர விதைக்கப்படவில்லை என்பதே உண்மை.

இந்த நுண்ணூட்டச்சத்துக்களின் குறைபாடு பயிர்களில் விளைச்சலைப் பெருமளவு பாதிப்பதோடு மட்டுமின்றி, மண்ணில் வாழும் நன்மை தரும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டையும் குறைக்கின்றன. இதன் காரணமாக மண்ணின் நுண்ணுயிர் நைட் ரஜன் நிலைப்பாடு, மணிச்சத்தின் ஊட்டம் ஆகிய உயிரியல் செயல்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன.

மேலும் சமச்சீரான ஊட்டம் பயிருக்கு நோய் மற்றும் பூச்சிகளுக்கான எதிர்ப்பு

தியை அளிப்பதோடு மட்டுமல்லாமல் மண்ணின் வளத்தையும் காத்து உணவு உற்பத்தியை மேம்படுத்துகிறது. மேலும் ஒவ்வொருபயிரும் தன் வளர்ச்சிப்பருவத்தில் ஒரு குறிப்பிட்ட ஊட்டச்சத்தை அத்தியாவசியமாகக் கொண்டது. உதாரணமாக துத்தநாகம் பருத்தியில் பூ வளர்ச்சிக்கும், போரான் வேர்க்கடலையில்கொட்டை வளர்ச்சிக்கும், மாலிப்டினம் பருப்பு வகைகளில் வேர் வளர்ச்சிக்கும் துணைபுரிகின்றன. எனவே சரியான பருவத்தில் சரியான விகிதத்தில் வழங்கப்படும் ஊட்டச்சத்து பயிரின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது.

**-மு.வித்யா, திருவள்ளூர்.**

## இயற்கை வேளாண்மை



கத்தரி சாகுபடியில் நஞ்சில்லாத காய்கறிகளை உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு நமக்கு தயாராக இருப்பது இயற்கை முறை சாகுபடியாகும். சாகு படிக்கு தேவைப்படும் நாற்றங்கால் பரப்பு 25 அடி நீளம். அகலம் 4 அங்குலம் உயரம் கொண்டதாக இருக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 500 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் இடவேண்டும். இதோடு அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா இவைகளை ஒரு கிலோ வீதம் போடவேண்டும். காய்கறி செடியில் மிகக்கொடிய வாடல் நோயினை கட்டுப்படுத்த டிரைகோடெர்மா விரிடி என்னும் இயற்கை சம்பந்தப்பட்ட பூசணக்கொல்லி ஒரு கிலோ அளவினை நாற்றங்காலுக்கு இட்டு மண்ணினை நன்கு கொத்திவிட வேண்டும். ஒரு ஏக்கரில் 200 கிராம் விதை விதைக்க வேண்டும். அடுத்து நடவு வயல் தயாரிப்பதற்கு நல்ல வடிகால் வசதி உண்டாவதற்கு உளி கலப்பையால் உழுதுவிட வேண்டும். நன்கு மக்கிய தொழு

உரம் 15 டன் போட்டு உழுது பார்சால் போட வேண்டும்(இரண்டரை அடி x இரண்டு அடி).

நாற்றங்காலில் நல்ல திடமான 28 நாள் வயதுடைய நாற்றினை எடுத்து வயலில் நடவேண்டும். (பாருக்கு பார் இரண்டரை அடி) செடிக்கு செடி 2 அடி. நடவு நட்ட 21, 42, 63, 84 ஆகிய நாட்களில் ஒவ்வொரு முறையும் ஒரு டன் மக்கிய தொழு உரம், ஒரு கிலோ பாஸ்போ பாக்டீரியா, ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடி இவைகளைக் கலந்து வயலில் போட்டுபாசனம் செய்ய வேண்டும். நடவு நட்ட மூன்றாவது வாரம் கழித்து மாதம் இரு முறை உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகளான பவேரியா பாசியானா. இதனை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி அளவு கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தானது செடிகளைத் தாக்கும் காய்ப்புழுக்களுக்கு வியாதியை உண்டாக்கி அவைகளை மடியச் செய்துவிடும். செடியில் பூச்சிகள் தாக்கும் சேதத்தினைத் தவிர்க்க வாரம் ஒரு முறை "பைட்டோபிராட்' என்னும் பூச்சி விரட்டியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி அளவு கலந்து தெளிக்கவும். இது போடுவதால் விஷமருந்து போடுவதை தவிர்க்கவும். பூமிக்கு பாசனம் செய்து நன்கு கொத்திவிட்டு மக்கிய தொழு உரம் இடவேண்டும். கத்தரி நட்ட 75வது நாளிலிருந்து 120 நாட்கள் வரை அறுவடை வரும். ஏக்கரில் 65 கிலோ கொண்ட மூடை 135 கிடைக்கும். வளரும் செடிகளுக்கு காலத்தில் பாசனம் செய்ய வேண்டும். இயற்கை முறையை அனுசரிக்கும்போது பாசன முறையில் செலவு மிச்சம் ஏற்படும். பாசன நீர் கிரகிக்கப்பட்டு பூமி உலர்ந்தவுடன் ஆட்களை வைத்து கத்தரி செடியை சுற்றி பூமியை தளர கொத்திவிட வேண்டும். இதனால் கத்தரி மகசூல் மேலும் அதிகரிக்கும்.

**லாப நஷ்ட விவரங்கள்:** இயற்கை முறை சாகுபடியில் செலவு ரூ.22,000 ஆகும். காய்கள் விற்பனையில் ரூ.68,000 கிடைக்கும். நிகர லாபம் ரூ.46,000 கிடைக்கும். இயற்கை முறை சாகுபடியை தொடர்ந்து செய்யும்போது சாகுபடி செலவு குறையும். வரவு அதிகரிக்கும். லாபம் கூடுதலாக இருக்கும். இனி விவசாயிகள் காய்கறி சாகுபடியில் இயற்கை முறை சாகுபடியை தொடர்ந்து செய்ய வேண்டும். வருங்காலத்தில் இயற்கை முறை சாகுபடிதான் மிகவும் ஏற்றது. அந்த இயற்கை முறை சாகுபடியை செய்வதற்கு சக்தியை கொடுப்பது நுண்ணுயிர்களும் உயிர்

உரங்களும் ஆகும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

## சின்ன சின்ன செய்திகள்





**மாதுளை -** காய்ந்த, நோய் தாக்கிய, குறுக்கும் நெடுக்குமாக வளர்ந்துள்ள கிளைகள், போத்துக்களை நீக்கிவிட வேண்டும். புதிய கிளைகளில் பழங்கள் தோன்றும். எனவே, புதிய கிளைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த பழங்களை அறுவடை செய்தபிறகு டிசம்பர் மாதத்தில் பழைய கிளைகளை மூன்றில் ஒரு பகுதி நீக்கிவிட வேண்டும். பூக்கள் அதிகமாக இருந்தால் போதிய எண்ணிக்கை விட்டு, மீதமுள்ளவற்றை நீக்கிவிட்டால் பெரிய பழங்களைப் பெறலாம். திரவ பாரபின் ஒரு சதம் மருந்தை ஜூன் மாதத்தில் 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிப்பதன் மூலம் பழங்களில் வெடிப்பு உண்டாவதைத் தடுக்கலாம். (தகவல்: வே.கெர்சோன் தங்கராஜ், தோட்டக்கலை உதவி இயக்குனர், போடி)

**ஏலத்தோட்டத்தில் பூச்சி, நோய் நிர்வாகம்:** தோட்டத்தில் பறக்கும் வேர்ப்புழு வண்டுகளை சேகரித்து அழித்துவிட வேண்டும். * ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தில் குயினால்பாஸ் அல்லது பாசலான் பூச்சிக்கொல்லியை 100 லிட்டர் தண்ணீரில் 200 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். (தண்டு துளைப்பான் அந்துப்பூச்சி வெளிவரும் சம யத்தில் தெளிக்க வேண்டும்). * அழுகல் மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்குதல் அதிகமுள்ள இடங்கள் பயிர் சுகாதார முறைகளைக் கடைபிடிப்பது, பூசனக்கொல்லி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைப் பயன்படுத்துவது போன்ற ஒருங்கிணைந்த நோய் நிர்வாக முறைகளைக் கையா ளலாம். * தண்ணீர் தேங்கும் பகுதிகளில் போதுமான வடிகால்

வசதி அமைக்க வேண்டும். * 0.2 சதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலை 100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில் கலந்து தூர்ப்பகுதியில் ஊற்றுவதுடன் ஒரு சத போர்டோ கலவை தெளிக்க வேண்டும். 10 நாட்கள் கழித்து டிரைகோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடாமோனசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இடவேண் டும். மீண்டும் ஒருமுறை டிரைகோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடாமோனசுடன் கலந்தோ இட்டு 0.4 சதம் அகோமின் கரைசலை இலையின் மீது தெளிக்க வேண்டும். * உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைக் கடைபிடிக்கும்போது டிரைக்கோடெர்மா ஹேசியானத்தை தனியாகவோ அல்லது சூடோமோனஸ் புளோரசன்சுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இடவேண்டும். * தோட்டத்தை அடிக்கடி கண்காணித்து கட்டே (நச்சுயிரி) நோய் தாக்குதல் உள்ள செடிகள் காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் அகற்றி அழித்து விட வேண்டும்.

**நாற்றுப்பண்ணை:** இந்தியாவில் முதல் முறையாக நாற்றுப்பண்ணைக்கு என்று மிகப்பெரிய அலுவலகம் வாசனை சந்தனம், அகர்மரம், குமிழ், தேக்கு, மலைவேம்பு, கலப்பு மரங்கள் வளர்ப்பு. சொந்த பண்ணையில் நாற்று உற்பத்தி, விவசாயிகளின் தேவைக்கேற்ப கன்றுகளை வழங்குதல், நடவு மற்றும் பயிரிடப்படும் புதிய தொழில்நுட்ப முறையினை பயன்படுத்துதல்; கன்று நடவு செய்த விவசாயிகளின் தகவல்களை முழுமையாக பராமரிக்க கணினி வசதி; விவசாயிகளின் சந்தேகங்களை தீர்க்கும் வகையில் மாநிலந்தோறும் நிறுவனத்தில் கருத்தரங்கு, பயிற்சிகளை அனுபவம் வாய்ந்த வேளாண் வல்லுனர்களைக் கொண்டு நடத்துதல்;
மாநிலங்களில் பல்வேறு இடங்களில் பல் வேறு நிலைகளில் உள்ள மரங்களின் மாதிரிப்பண்ணை; அறுவடை செய்த மரங்களை பயன்பாடுகளுக்கு ஏற்ப உபபொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தல்; உபபொருட்களை உற்பத்தி செய்ய முன்னணி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்தல்; ஆர்டரின்பேரில் - குழி எடுத்து நடவு, சொட்டுநீர் பாசனம், மின்வேலி அமைத்துக்கொடுக்கப்படுகிறது. தொடர்பு முகவரி: "ராஜா, பாளையம் கார்கூடல்பட்டி (போஸ்ட்), ராசிபுரம்-636 202. நாமக்கல் மாவட்டம். போன்: 04287-294 094, 96555 99111; 97875 37631, 97517 92555, 94886 94459.

**ட்ரீ ரிச் பயோபூஸ்டர்:** வளர்ச்சி ஊக்கியை ஆராய்ச்சியின் மூலம் கோவையிலுள்ள வன மரபியல் மற்றும் வனப்பெருக்க மையம் உருவாக்கியுள்ளது. இந்த வளர்ச்சி ஊக்கியை மர இலைகளான சவுக்கு, குமிழ், பெருமரம், மலைவேம்பு, தேக்கு மற்றும் யூகலிப்டஸ் போன்ற மரவகை நாற்றுக்களை வளர்க்க பெரிதும் பயன்படுகிறது. கத்தரி, தக்காளி, மிளகாய் போன்ற காய்கறிப் பயிர்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்புக்கு: "வன மரபியல் மற்றும் வனப்பெருக்க மையம், ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர்-641 002. போன்: 0422-248 4169, 248 4100.

**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## அதிக வருவாய் ஈட்டித்தரும் மலைவேம்பு



விவசாய நிலங்களின் மதிப்பு கூடி வந்தாலும் அந்த நிலங்களில் இருந்து விவசாயம் செய்வது மூலமாக வரும் வருவாய் குறைந்து வருவது விவசாயிகளின் இன்றைய முக்கிய பிரச்னையாகும். இதனால் பல விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட் ஆக மாறிவருகிறது.

குறைந்த முதலீடு மற்றும் மேலாண்மையில் அதிக லாபம் ஈட்டித்தரும் மலைவேம்பு போன்ற தொழிற்சாலைப் பயன்பாடு மரங்களை பண்ணைக்காடுகளாக வளர்ப்பதின் மூலம் இந்த பிரச்னையை எதிர்கொள்ளலாம். மலைவேம்பு குறைந்த காலத்தில் வேகமாக வளர்ந்து அதிக வருவாய் ஈட்டி ஒரு பணமரமாகும். இது தீக்குச்சி, பிளைவுட் தொழிற்சாலை மற்றும் பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலைக்கும் அதிகமாக தேவைப்படுகிறது. மரங்களின் தேவைக்கும் விளைச்சலுக்கும் அதிக இடைவெளி இருப்பதால் மலைவேம்பு நடுவதின்மூலம் ஒரு ஏக்கரில் இருந்து வருடத்திற்கு ஒரு லட்சம் வரை வருமானம் ஈட்ட முடியும். மலை வேம்பு பல வகையான மண்ணில் வளர்வது என்றாலும் நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான வண்டல்மண் மற்றும் வளமான மண்களில் நன்கு வளரக்கூடியது.

இரண்டு வருடங்களில் 40 அடி உயரம் வளரக்கூடியது. கால்நடைகள் இதை உண்ணுவது கிடையாது என்பதால் இதை பராமரிப்பது சுலபம். மலைவேம்பு 1000 மி.மீ. வரை மழை பொழியும்இடங்களில் வளரக்கூடியது என்றாலும் குறைந்த அளவு நீர் பாசனத்தில் எல்லா இடங்களிலும் வளரக்கூடியது. மலைவேம்பு நடுவதற்கு 60 செ.மீ. நீள, அகல மற்றும் ஆழ குழிகளை பருவ மழைக்கு முன் எடுக்க வேண்டும். தொகுதி தோட்டமாக நடுவதற்கு 3 x 3 மீட்டர் இடைவெளியில் குழி எடுக்க வேண்டும். சரளை கற்களை அகற்றிவிட்டு மேல்மண்ணை இட்டு மூடவேண்டும். நல்ல ஆரம்ப வளர்ச்சிக்கு குழிக்கு 10 கிலோ தொழு உரம், 100 கிராம் வேப்பம்புண்ணாக்கு மற்றும் 50 கிராம் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் வேம் இடவேண்டும். பருவமழை ஆரம்பித்த உடன் ஏக்கருக்கு 444 மரங்களை நடலாம். அவ்வப்போது பக்கவாட்டில் வரும் கிளைகளை கழித்துவர வேண்டும். நடவு செலவு ஏக்கருக்கு ரூ.12,000 வரை ஆகும். ஐந்து வருடத்தில் 90 செ.மீ. மரத்தின் சுற்றளவு வந்தவுடன் அறுவடை செய்யலாம். ஐந்து வருடத்தில் ஒரு மரம் 5-7 கன அடிவரை பலகையை தரக்கூடியது. இன்றைய மதிப்பு ஒரு கன அடி ரூ.400 ஆக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு ஐந்து வருடத்தில் 12 லட்சம் வரை வருமானம் பெறலாம்.

**முனைவர் கூ.கண்ணன், முனைவர் டி.வி.சிங், வி.சி.செல்வி,**

**முனைவர் ஒ.பி.எஸ்.கோலா,**

**உதகமண்டலம்.**

## வறட்சியிலும் வளம் காணும் பேரீச்சை சாகுபடி



தமிழகத்தில் தற்பொழுது பெரும்பாலான மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு மட்டுமல்லாமல் விவசாய பயிர்கள் காய்ந்து கருகிப்போனதுடன் பல ஆண்டுகள் பராமரித்து வந்த தென்னை மரங்களும் வறட்சியை தாங்கும்மா, போன்ற மரங்களும் காய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த வறட்சியான இயற்கை சீற்றத்தையும் எதிர்கொண்டு தர்மபுரி பேரீச்சை பண்ணையில் மரங்கள் காய்ந்து குலைகுலையாய் மக்கள், பொன்னிறங்களில் மரத்தைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கிறது. கடும் வறட்சியில் பேரீச்சை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி 3 மாதங்களுக்கு மேலாகிறது. இருப்பினும் வறட்சியை கண்டுகொள்ளாமல் மரங்கள் பசுமையாக உள்ளது. பேரீச்சையை பொறுத்தவரையில் இதைவிட வரலாறு காணாத வறட்சி வந்தாலும் மரம் காய்ந்து போவதற்கு வாய்ப்பே இல்லை. பேரீச்சை செடிகளை நடவு செய்து ஒரு வருடம் வரை பராமரித்துவிட்டாலே போதும். வறட்சியால் மரம் இறந்துபோக வாய்ப்பில்லை. எனவே வறட்சியிலும் தொடர்ந்து வளமான வருமானம் தரும் பயிர் பேரீச்சைய தவிர வேறெந்த பயிரும் இருக்காது. பேரீச்சை பண்ணையில் தற்பொழுது உலக தரம் வாய்ந்த பேரீச்சை ரக பழங்கள் மகசூலில் உள்ளது. பரி ரக திசுவளர்ப்பு கன்றுகள் நடவுசெய்ய தயார் நிலையில் உள்ளது. பேரீச்சை பண்ணையில் தற்பொழுது விதை கன்றுகள் வினியோகத்தை தவிர்த்துவிட்டு நவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் ஆய்வகத்திலும் நர்சரியிலும் 4 ஆண்டு வயதுள்ள கன்றுகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுகிறது. அவை நடவு செய்து 2 ஆண்டு நிறைவில் மகசூலுக்கு வந்துவிடுகிறது. முதல் வருட காய்ப்பிலேயே முதலீட்டு பராமரிப்பு செலவையும் எடுத்துவிட்டு லாபத்தையும் பார்க்கலாம். தொடர்ந்து 90 ஆண்டுகள் வரை அதிக அளவில் நிரந் தர வருமானம் பெறலாம். எனவே பல ஆண்டுகள் பராமரித்து வறட்சியால் பெரிதும் பாதிக்கப்படும் தென்னை, மா பயிர்களுக்கு பதிலாக பேரீச்சை பயிரிட்டு வாழ்நாள் முழுவதும் நிம்மதியான வாழ்வாதாரத்தை பெறலாம். தொடர்புக்கு: நிஜாமுதீன், 04342-243 567, 243 202, 292 840, 0 94423 37717.

**-கே.சத்தியபிரபா, உடுமலைப்பேட்டை.**

## தேயிலை தொழிற்சாலையில் புதிய இயந்திரங்கள்

மஞ்சூர் அருகே பிக்கட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில், தேயிலை உற்பத்திக்கு டிரையர், சி.டி.சி., இயந்திரம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த இயந்திரங்கள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆனதால், தடையின்றி, லாபகரமாக தேயிலை உற்பத்தி மேற்கொள்ள தொழிற்சாலை நிர்வாகம் முடிவெடுத்தது. அதன்படி, மாநில அரசின் தொழிற்சாலை நவீன மயமாக்குதல் திட்டத்தின் கீழ், புதிய டிரையர், சி.டி.சி., இயந்திரம் 62 லட்சம் ரூபாயில் வாங்கப்பட்டு நிறுவப்பட்டது. அரசு சார்பில் 50 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. புதிய இயந்திரம் துவக்க விழா தொழிற்சாலை வளாகத்தில் நடந்தது. தொழிற்சாலை பெருந்தலைவர் நந்தி தலைமை வகித்தார். பிக்கட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாக இயக்குனர் சுப்ரமணி முன் னிலை வகித்தார். மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாக இயக்குனர் அருணாச்சலம் புதிய இயந்திரத்தை இயக்கி வைத்தார். கிண்ணக்கொரை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாக இயக்குனர் கோட்டைசாமி, துணைத் தலைவர் கிருஷ்ணன், நிர்வாக குழு உறுப்பினர்கள், அங்கத்தினர்கள் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கான கருத்தரங்கு

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை வனவியல் விரிவாக்க கோட்டம் தமிழ்நாடு உயிர் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கம் திட்டத்தின் கீழ் தனியார் நிலங் களில் மரம் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடந்தது.

வனவியல் விரிவாக்க அலுவலர் ஏழுமலை தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். வனச்சரக அலுவலர் தர்மலிங்கம் முன்னிலை வகித்தார். தோட்டகலைத்துறை உதவி வேளாண் அலுவலர் அன்பழகன், தொண்டு நிறுவன நிர்வாகிகள் திலகம், நடார்ஸ், களப்பணியாளர்கள், அரசூர், பொய்கை அரசூர், காந்தலவாடி, சித்தானங்கூர், மாமந்தூர், திருநாவலூர், குன்னத்தூர், களமருதூர் பகுதியில் இருந்து விவசாயிகள் பங்கேற்றனர்.

## இயற்கை உரத்தில் நெல் பயிரிட தயாராகும் விவசாயிகள் :அவுரி, சணப்பை, தக்கை பூண்டு விதைப்பு

சம்பா பட்டத்தில், இயற்கைஉரங்களான, அவுரி, சணப்பை, தக்கை பூண்டு ஆகியவற்றை பயன்படுத்தி, பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், செய்யூர் ஆகிய தாலுகாவில், பாலாற்று நீர் மற்றும் கிணற்று நீரை பயன்படுத்தி, சாகுபடி செய்யும் விவசாயிகள், தற்போது, சம்பா பட்டத்தில், பயிர் செய்ய தயாராகி வருகின்றனர். இதற்காக, வெள்ளை பொன்னி, பாபட்லா ஆகிய நெல் விதைகளை, வேளாண்மை துறை அலுவலகங்களிலிருந்து பெற்று, நாற்று விடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இயற்கை உரம் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், நாற்று விட்ட, 18 நாட்களில், நடவு செய்வதற்காக, நிலங்களை தயார் செய்து வருகின்றனர். இதற்காக, பசுந்தாள் உரங்களான அவுரி, சணப்பை, தக்கை பூண்டு போன்றவற்றை விதைத்து வளர்த்து உள்ளனர். இயற்கையாக, மண்ணிற்கு தேவையான தழைச்சத்து கிடைப்பதால், ரசாயன உரத்தின் பயன்பாடு மற்றும் செலவு குறைகிறது.கூடுதல் மகசூல் இதுகுறித்து, மணப்பாக்கத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி ராமானுஜம் கூறுகையில், ""கடந்த ஆண்டு மாவட்டத்தில் அதிகமாக நெல் உற்பத்தி செய்ததற்காக, முதல் பரிசை பெற்றேன். இந்த ஆண்டு, சம்பா பருவத்தில், பயிர் செய்வதற்காக, 10 ஏக்கர் நிலத்தில், அவுரி, சணப்பை ஆகியவற்றை வளர்த்துள்ளேன். இதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கும். நடவு செய்வதற்கு நாற்று விட்டுள்ளேன். இந்த ஆண்டும், முதல் பரிசை பெறுவதற்கு முயற்சி செய்துவருகிறேன். இம்மாதம், பரவலாக மழை பெய்து வருவதால், கிணறு, ஆழ்துளை கிணறு பாசன விவசாயிகள் நெல் பயிர் செய்வதற்கு, நாற்று விடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்," என்றார்.அதிகரிப்புஇதுகுறித்து, வேளாண்மை

துறைஅதிகாரி ஒருவர் கூறுகையில்,""மாவட்டத்தில், கடந்த ஆண்டு சம்பா பட்டத்தில், 1 லட்சம் ஏக்கரில், நெல் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு, 1.25 லட்சம் ஏக்கரில், நெல் பயிரிடப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, இயற்கை உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்," என்றார்.

தினகரன்

**ன்றைய வேளாண் செய்திகள்**

**21.08.2013**

## சூளகிரி, ராயக்கோட்டை மார்க்கெட்டில் கொத்தமல்லி, தக்காளி வரத்து அதிகரிப்பு



சூளகிரி : சூளகிரி, ராயக்கோட்டை தினசரி மார்க்கெட்டிற்கு கொத்தமல்லி, தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி மற்றும் சுற்றியுள்ள மாரண்டபள்ளி, மருதாண்டப்பள்ளி, தியாகரசனப்பள்ளி, காளிங்காவரம், பேரிகை, காமன்தொட்டி, உலகம் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் சாகுபடி செய்யப்படும் கொத்தமல்லி தழைகள் வாசனையுடன், பசுமையாக காணப்படுகிறது. இதனால் சென்னை, மதுரை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் இருந்து வரும் வியாபாரிகள் கொத்தமல்லி தழைகளை மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர்.

சூளகிரி சந்தைக்கு நேற்று சுமார் 10 டன் கொத்தமல்லி தழை வரத்து காணப்பட்டது. அதனை சிறு சிறு கட்டுகளாக கட்டி மூட்டைகளில் அடைத்து விற்பனைக்காக வைத்திருந்தனர். கட்டு ஒன்றுக்கு 4 முதல் 5 வரை விலை வைத்திருந்தனர். சிறிது நேரத்தில் அனைத்து கட்டுகளும் விற்றுத் தீர்ந்தது. இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:

ஆடி மாதம் முடிந்ததையடுத்து வரிசையாக சுப முகூர்த்த நாட்கள் வருவதையொட்டி கொத்தமல்லிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் 8 டன் கொத்தமல்லி விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. தற்போது நாள் ஒன்றுக்கு 10 டன் வரை வரத்து காணப்படுகிறது. அனைத்து மூட்டைகளும் உடனுக்குடன் விற்று தீர்ந்து விடுகிறது. மழை சீசனில் மேலும் விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை மார்க்கெட்டிற்கு நேற்று 20 டன் தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 250க்கு விற்பனை செய்யப்பட்டது. வியாபாரிகள் கூறும்போது, கடந்த வாரம் 18 டன் தக்காளி வந்து கொண்டிருந்தது. தற்போது 20 டன் ஆக அதிகரித்துள்ளது. எதிர்வரும் 2 மாதங்களுக்கு இதே நிலையில் தக்காளி வரத்து காணப்படும். வரத்து அதிகரித்துள்ள நிலையில், வெளியூர்களில் இருந்து வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதால் விலை சரிந்துள்ளது என்றனர்.

**பயிர் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்தும் புதிய ஒப்பந்தம்**



தனியார் துறையில் உள்ள ரிலையன்ஸ் ஜெனரல் நிறுவனம் மத்திய அரசின் பயிர் காப்பீட்டு திட்டத்தை நாட்டில் உள்ள 21 மாநிலங்களில் அமல்படுத்தும் புதிய ஒப்பந்தத்தை பெற்றுள்ளதாக கூறியுள்ளது. பருவநிலை மாற்றத்தால் இழப்பை

சந்திக்கும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக பருவநிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு தீவிரம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

**இன்று இடியுடன் மழை**



சென்னை : வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை ஒரு சில இடங்களில் பெய்யக்கூடும். தரைக்காற்று சில சமயங்களில் வலுத்து வீசக்கூடும். அதிகபட்சம் மற்றும் குறைந்த பட்சம் வெப்பநிலை முறையே 36 மற்றும் 26 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மழை இல்லாததால் உற்பத்தி சரிவு தேவை அதிகரிப்பால் வாழைத்தார் விலை உயர்வு**

பரமத்திவேலூர்: நாமக்கல் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் வாழை சாகுபடி குறைந்து விலை அதிகரித்துள்ளது.
நாமக்கல் மாவட்டத்தில் காவிரி ஆற்று படுகையில் வாழை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பரமத்திவேலூர் அருகே உள்ள பாண்டமங்கலம், வெங்கரை, பொத்தனூர், நன்செய்இடையாறு, பாலப் பட்டி, மோகனூர் உள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இந்த

பகுதியில் உற்பத்தியாகும் வாழை பழங்கள் பரமத்திவேலூரில் உள்ள தினசரி சந்தையில் ஏலம் விடப்படுகிறது.

கரூர், ஈரோடு, திண்டுக்கல், சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர் ந்த வியாபாரிகள் வாழை பழங்களை கொள்முதல் செய்கின்றனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்கு பரமத்திவேலூரில் இருந்து வாழைப்பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த சில மாதங்களாக போதிய மழை பெய்யாததால் உற்பத்தி குறைந்துள்ளது. கோயில் விழாக்கள் காரணமாக கிராமங்களில் வாழைப் பழத்துக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் வாழைப்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் `400க்கு விற்ற ஒரு பூவன் பழ தார் நேற்று `500க்கு விற்பனையானது. இதேபோல் ரஸ்தாளி `450ல் இருந்து `550ஆக விலை உயர்ந்தது. பச்சை நாடன் `500ல் இருந்து `600, கற்பூரவள்ளி `350ல் இருந்து `400க்கும், மொந்தன் ரகம் `600ல் இருந்து `700க்கும் விலை போனது. கடந்த வாரத்தைவிட விலை கூடுதலாக இருந்தாலும், உற்பத்தி குறைவு என்பதால் அதிக லாபம் இல்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

வியாபாரிகளிடம் கேட்டபோது, ‘கோயில் விழா உள்ளிட்ட காரணங்களால் வாழை பழத்துக்கான தேவை அதிகரித்துள்ளது. `2க்கு விற்ற பழம் தற்போது `5 ஆக அதிகரித்துள்ளது. தேவை அதிகமாக இருப்பதால் விலை உயர்வு பாதிப்பை ஏற்படுத்தவில்லை’ என்றனர்.

**காய்கறி தொகுப்பு அபிவிருத்தி திட்ட ஆலோசனை கூட்டம்**

திண்டிவனம், :  விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் சம்பத் தலைமையில் பெருநகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்ட ஆலோசனை கூட்டம் திண்டிவனத்தில் நடந்தது. வேளாண்மை உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா பங்கேற்று பேசியதாவது,

பெருநகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் தரமான காய்கறிகளை உற்பத்தி செய்தல், இடைத்தரகர்கள் இன்றி நேரடி கொள்முதல், காய்கறி சேகரிப்பு மையம் அமைத்தல் போன்ற பல்வேறு சலுகைகள் மூலம்

விவசாயிகள் பயனடையலாம்.

சென்னை நகருக்கு தற்போது விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூவர், காஞ்சிபுரம், தர்மபுரி என ஐந்து மாவட்டங்களிலிருந்து காய்கறி வரு கிறது. இதனை மூன்று மடங்காக உயர்த்துவதே அரசின் திட்டமாகும். அதற்காக அந்தந்த பகுதியில் விவசாயிகள் குழு அமைத்து குளிர் கிடங்கில் சேகரித்து மொத்தமாகவோ அல்லது சிறிய அளவில் சேர்த்து அதற்கு ஏற்ப வாகனங்கள் மூலம் விவசாயிகள் நேரடியாக சென்னையில் விற்பனை செய்வதே திட்டத்தின் நோக்க மாகும்.

அதற்கு வங்கிகள் மூலம் வாகனம் வாங்க 40 சதவீதம் அரசு மானியம் வழங்க இருக்கிறது. விலை களை எஸ்எம்எஸ் மூலம் உடனுக்கு உடன் தெரிந்து கொள்ளலாம். முதற் கட்டமாக இத்திட்டம் தற்காலிகமாக ஒலக்கூர், மரக்காணம், மயிலம், கோலியனூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் வட்டாரங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. என்றார்.

கூட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை ஆணையர் சத்யபிரதா சாகு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் சுனில் மேஷ்ராம், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி, வணிக துணை இயக்குநர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வத்தல் மிளகாய் வரத்து குறைந்ததால் விலை அதிகரிப்பு**

சேலம்: வத்தல் மிளகாய் மழையின்மையால் விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்து விலை அதிகரித்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் கொளத்தூர், ஆந்திரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்தும் வத்தல் மிளகாய் விற்பனைக்கு வருகிறது. போதிய மழையின்மையின் காரணமாக வழக்கத்தை விட இந்தாண்டு வத்தல் மிளகாய் வரத்து 30 சதவீதம் வரை குறைந்துள்ளது. சேலம் லீபசார் மிளகாய் மண்டிகளுக்கு வாரத்துக்கு 10 டன் வரை வத்தல் மிளகாய் விற்பனைக்கு வரும். இந்தாண்டு 7 டன் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. இதனால் கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.50 வரை தரத்துக்கு ஏற்றாற்போல் வத்தல் மிளகாயின் விலை அதிகரித்துள்ளது. தற்போது பச்சை மிளகாய் விலை கிலோ

ரூ.80 வரை அதிகரித்துள்ளதால் வரும் வாரங்களில் வத்தல் மிளகாய் விலை மேலும் உயரும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
நேற்றைய நிலவரப்படி லீபசார் மார்க்கெட்டில் மொத்த விற்பனையில் கொளத்தூர் மிளகாய் கிலோ ரூ.110 முதல் ரூ.120 வரையும், சம்பா காம்பு கிலோ ரூ.75, ஆந்திர மிளகாய் ரூ.85, மத்தியப்பிரதேச மிளகாய் ரூ.85 வரையும் விற்பனை செய்யப்பட்டது.

வியாபாரிகள் கூறுகையில், ''சேலம் மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் பெரும்பகுதி மிளகாய் கொளத்தூர் பகுதியில் இருந்து வருகிறது. கொளத்தூர் மிளகாய்க்கு எப்போதும் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது. இந்தாண்டு மழையின்மையின் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சல் இல்லை. தரமும் கடந்த ஆண்டு போல இல்லை. மத்தியப்பிரதேசம் மற்றும் ஆந்திராவில் இருந்து வரும் மிளகாய் வரத்து குறைந்துள்ளது. லீபசார் மார்க்கெட்டில் வாரத்துக்கு 10 டன் வரை வத்தல் மிளகாய் விற்பனைக்கு வரும். கடந்த சில வாரங்களாக 7 டன் வரை மட்டுமே விற்பனைக்கு வருகிறது. வத்தல் மிளகாய் விலை ரூ.30 முதல் ரூ.50 வரை அதிகரித்து அதிகபட்சமாக கிலோ ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது. பச்சை மிளகாயின் விலை தொடர்ச்சியாக உயர்ந்து வருவதால் இன்னும் சில வாரங்களில் வத்தல் மிளகாய் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினார்.

## விவசாயத்தில் தொழில்நுட்ப ஆலோசனை பெற தொலைபேசி எண்கள் விவசாயிகளுக்கு அழைப்பு விவசாயிகளுக்கு அழைப்பு

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்தில் தொழில்நுட்ப ஆலோசனை பெற தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜஹான் தெரிவித்திருப்பதாவது: புதுக்கோட் டை, இலுப் பூர், கீரனூர், கந்தர்வக்கோட்டை, குடுமியான்மலை, காரை யூர், பொன்னமராவதி மற்றும் மணமேல்குடி பகுதிகளில்

நல்ல மழை பெய்துள்ளது. அந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் தற் போது பெய்துள்ள மழை யை பயன்படுத்தி நெல் நாற்றுவிட வேண்டும். இப்பருவத்திற்கு தேவை யான ஏ.டி.டி 39 மற்றும் பி.பி.டி. 5204 சான்று விதைகள் அனைத்தும் வேளாண்மை விரிவாக்க மையங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் (கடைகள்) இருப்பு வைத்து மானியத்தில் விநியோகம் செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறையை கடைப்பிடித்தால் அதிக மகசூல் பெறலாம். திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒரு ஏக்கருக்கு ஒரு சென்ட் நாற்றங்காலில் விதைக்க 3 கிலோ விதை போதுமானது.

மேலும் வயல் மண் 70 சதவீதம், கரும்பு ஆலைக்கழிவு அல்லது சாணக்கழிவு 20 சதவீதம் ஆகியவற்றுடன் தொழு உரம் 10 சதவீ தம் கலந்து மண் கலவை தயார் செய்து அரை மீட்டர் நீளம், ஒரு மீட்டர் அகலம் மற்றும் நான்கு சென்டிமீட்டர் ஆழம் கொண்ட நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்ட சட் டத்தை பாலித்தின் விரிப் பின் மீது வைத்து மண் கல வையை தூவி நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும். விதையை ஒரு நாள் முழுவதும் ஊர வைத்து பின்னர் வடித்து ஒரு நாள் நிழலில் வைத்து முளை கட்டவைத்து பின்பு விதைக்க வேண்டும். விதை நேர்த்தி செய்யும்போது ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமோ னாஸ் புளூரோசன்ஸ் விதை நேர்த்தி மருந்து கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைப்பதற்கு 30 நிமிடம் முன் 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் அரிசி கஞ்சி கொண்டு நேர்த்தி செய்யலாம்.

விதைகள் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் கிலோவிற்கு ரூ.5க்கு மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.  தொழில்நுட்பம், விதை இருப்பு மற்றும் மானியம் குறித்து விவசாயிகள் ஆலோசனை பெற சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ள லாம். அதன்படி புதுக்கோட் டை, 043222203 29, செல் நம்பர் 9843322167. கந்தர்வக்கோட்டை 04322275996, 94433 18987. திருவரங்குளம் 04322250351,

94430 08455. கறம்பக்குடி 04322258121, 99421 35193, அறந்தாங்கி 04371270510, 94444 25183, ஆவுடையார்கோவில் 04371233950, 99441 83612, மணமேல்குடி 04371250140, 94438 26047, திருமயம் 04333274250, 99443 31844, அரிமளம் 04333271445, 94439 51109, பொன்னமராவதி 04333260011, 96775 65274, அன்னவாசல் 04339291436, 98655 29676, விராலிமலை 04339221351, 89034 89817, குன்னாண்டார்கோவில் 04339202543, 94884 00216 ஆகிய எண்களில் தொடர்பு கொள் ளலாம். மேலும் வேளாண் மை இணை இயக்குனர் அலுவலகத்தை 04322221666 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**சம்பா, வாழை சாகுபடிக்கு வங்கிகள் புதிய பயிர் கடன் வழங்க வேண்டும் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

கரூர்: சம்பா மற்றும் வாழை சாகுபடிக்கு புதிய பயிர் கடன்களை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.
சென்னையை தவிர தமிழகம் முழுவதும் 31 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. அதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் விவசாய பாதிப்பு குறித்து அமைச்சர் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் அறிக்கையின்படி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அறிவிக்கப்பட்டது. இந்த வறட்சி நிவாரணம் வழங்குவதற்கான கணக்கெடுப்பின்படி, கரூர் மாவட்டத்தில், குளித்தலை பகுதியில் 5 கிராமங்களில் 152 விவசாயிகளின் 206.85 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் பாதிக்கப்பட்டதாக கணக்கெடுக்கப்பட்டது. இவர்களுக்கு ரூ.30 லட்சத்து 99 ஆயிரத்து 750 நிவாரணம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதேபோல், கிருஷ்ணராயபுரம் பகுதியில் 8 கிராமங்களை சேர்ந்த 152 விவசாயிகளின் 395 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டதாக கணக்கெடுக்கப்பட்டு,

இவர்களுக்கு ரூ.28 லட்சத்து 25 ஆயிரத்து 250 நிவாரணம் அறிவிக்கப்பட்டது. அதன்படி, கரூர் மாவட்டத்தில் 13 கிராமங்களில் உள்ள 304 விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட 395 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு ரூ.59 லட்சத்து 25 ஆயிரம் நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும் பிற பகுதி விவசாயிகளும் நெல் பயிருக்கு இழப்பீடு கோரி தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர். வங்கி கடன் பெறாமல் சாகுபடி செய்யப்பட்டு சேதமடைந்த பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வலியுறுத்தி வருகின்றனர். வாழை பயிர் வறட்சி சேதத்தை மதிப்பிட தனியாக வறட்சிக்குழு மீண்டும் கரூர் மாவட்டம் வந்து ஆய்வு செய்தது. தற்போது காவிரியாற்றில் தொடர்ந்து நீர்வரத்து இருக்கிறது. அனைத்து பாசன வாய்க்கால்களிலும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. சம்பா பருவத்திற்கான சாகுபடி பணிகளை விவசாயிகள் மேற்கொண்டிருக்கின்றனர். அதுபோல காவிரி பாசன பகுதியில் வாழை பயிரும் அதிக அளவில் பயிரிட ஆயத்தமாக உள்ளனர். எனவே வங்கிகளில் உடனுக்குடன் பயிர் கடன்களை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து விவசாயி சுப்பிரமணியன் கூறுகையில், குறிச்சி, கவுண்டம்பட்டி, சூரியனூர், மேலப்பட்டி பகுதியில் 2500 ஏக்கர், குளித்தலை தாலுகாவில் பிறபகுதிகளில் 2500 ஏக்கர், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் 2,000 ஏக்கர், நங்கவரத்தில் மட்டும் 500 ஏக்கர் வாழைபயிர் சேதமடைந்திருக்கிறது. ஒட்டு மொத்தமாக ரூ.150 கோடி ரூபாய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் வாழைக்கு இன்னும் நிவாரணம் தரவில்லை. மேலும் பாசனத்திற்காக தண்ணீர் தற்போது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், வேளாண் கடன்களை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வேளாண் கடன்களுக்காக ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என கலெக்டர் தெரிவித்துள்ளது பாராட்டத்தக்கது. அதே சமயம் புதிய கடன்களை வழங்கினால் காவிரியில் வரும் தண்ணீரை பயன்படுத்தி சாகுபடி பணிகளை மேற்கொள்வதற்கு உதவியாக அமையும். ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களை திருப்பி செலுத்த கூடுதல் தவணை அளிக்கப்பட வேண்டும் என்றார்.

**80 சதவீத மானியத்தில் சோலார் பம்பு அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

தர்மபுரி, : தர்மபுரியில் 80 சதவீத மானியத்தில் சோலார் பம்பு அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இது குறித்து வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது:
தர்மபுரி மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் 201314ம் ஆண்டிற்கு விவசாயிகளின் நீர் பாசன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் சூரியசக்தியில் இயங்கும் பாசன வசதியை ஏற்படுத்தவும், மின்சாரம், டீசல் உள்ளிட்ட எரிபொருள் செலவின்றியும் பம்பு இயக்க சோலார் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
மேலும், தொலைதூரத்தில் உள்ள மின்இணைப்பு வழங்க இயலாத பகுதிகளுக்கு சோலார் பம்புகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக 80 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதில் 20 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பாகும்.
இத்திட்டம் நுண்ணீர் பாசன வசதி அமைத்துள்ள விவசாயிகளுக்கும், அமைக்க உள்ள விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும். எனவே, தர்மபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் சோலார் பம்புடன் நுண்ணீர் பாசன வசதி அமைக்க விரும்பும் விவசாயிகள், வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் உதவி செயற்பொறியாளரின் தர்மபுரி மற்றும் அரூர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம். மேலும் தொடர்புகளுக்கு, 18004257016 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**ராஜகம்பீரத்தில் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி**

மானாமதுரை: மானாமதுரை அருகே ராஜகம்பீரத்தில் விவசாயிகளுக்கு திருந்திய நெல்சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழத்தின் கீழ் இயங்கிவரும் பரமக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மூலம் பரளையாறு உபவடிநிலப்பகுதிகளுக்கான நீர்வள நிலவள

மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2013-14ம் ஆண்டிற்கான திருந்திய நெல்சாகுபடி செயல் விளக்கத்திடல் அமைக்கப்பட்டு மானாமதுரை அருகே ராஜகம்பீரத்தில் களப்பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பேராசிரியர் சக்திவேல் தலைமை வகித்தார். நெல்சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப்பேராசிரியர் ஜெயஸ்ரீனிவாஸ் விளக்கினார். திருந்திய நெல்சாகுபடியில் என்ன ரகங்கள் பயிரிடலாம் என்று வேளாண்மை அலுவலர் யோகமீனாட்சி விளக்கினார். உழவியல்துறை அலுவலர், வேளாண்மை அலுவலரிடம் விவசாயிகள் சாகுபடி குறித்த விளக்கங்கள் கேட்டனர். ராஜகம்பீரத்தை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சிக்கு வந்திருந்தனர். இளநிலை ஆராய்ச்சியாளர் முருகன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை இளநிலை ஆராய்ச்சியாளர் அருணாதேவி செய்திருந்தார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.08.2013**

## ஐந்து ஆண்டுகளில் உணவு பதப்படுத்தும் துறையில் முதலீடு 20 சதவீதம் அதிகரிப்பு



ஐதராபாத்

கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவு பதப்படுத்தும் துறையில் முதலீடு சராசரியாக 20 சதவீதம் அதிகரித்துள்ளது. தற்போது இத்துறையில் ரூ.1.50 லட்சம் கோடி முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

ஐதராபாதில் உணவு 360 என்ற பெயரில் வேளாண் தொழில் மற்றும் உணவு பதப்படுத்துதல் சார்ந்த கருத்தரங்கு மற்றும் கண்காட்சி ஒன்று நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. இந்த துறைகளில் உள்ள அடுத்த கட்ட வளமான வர்த்தக வாய்ப்புகளை இக்கண்காட்சி வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளில் வேளாண் பொருள்கள் மற்றும் பதப்படுத்திய உணவு பொருள்கள் ஏற்றுமதி ஆண்டுக்கு சராசரியாக 20 சதவீத வளர்ச்சி கண்டு

வந்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் இத்துறை 12 சதவீத பங்கினை கொண்டுள்ளது. உணவு பதப்படுத்துதல் துறை ஆண்டுக்கு 13 சதவீத வளர்ச்சி கண்டு வரும் நிலையில் தொழில்துறை உற்பத்தி 7 சதவீதம் மட்டுமே வளர்ச்சி கண்டு வருகிறது.

ஐ.டி.சி. அக்ரி மற்றும் ஐ.டி. தொழில் குழுமத்தின் தலைவர் எஸ்.சிவகுமார் இந்த கண்காட்சி தொடர்பாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் இத்தகவல்களை வெளியிட்டார்.

**கலெக்டர் அலுவலகம் முன்பு விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் முற்றுகை**

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் முன்பு அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் முற்றுகை போராட்டம் நடைபெற் றது.


ராமநாதபுரத்தில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முற்றுகை போராட்டம் நடைபெற்றபோது எடுத்த படம்.

முற்றுகை

ராமநாதபுரத்தில் அகில இந் திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தேசிய வேலை உறுதி அளிப்பு திட் டத்தில் வேலையின் அளவை 24 கன அடியாக குறைக்க வேண்டும். வேலை செய்வதற் கான உபகரணங்களை அந் தந்த ஊராட்சி மூலமே வழங்க வேண்டும். வேலை நேரத்தை 6 மணி நேரமாக குறைக்க வேண்டும். வேலை செய்யும் இடத்தில் குழந்தை கள் பராமரிப்பு கூடம், முத லுதவி பெட்டி வசதி, பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி போன்றவை ஏற்படுத்த வேண் டும் என்பது போன்ற கோரிக் கைகளை வலியுறுத்தி கலெக் டர் அலுவலகம் முன்பு முற் றுகை போராட்டம் நடை பெற்றது.

இதற்காக கலெக்டர் அலு வலக நுழைவு வாயில் பகுதி யில் நடைபெற்ற இந்த ஆர்ப் பாட்டத்துக்கு மாவட்ட தலை வர் குணசேகரன் தலைமை தாங்கினார்.

தாலுகா செயலா ளர்கள் ராமநாதபுரம் செல் வராஜ், முதுகுளத்தூர் அழகர், தாலுகா தலைவர்க ள் கடலாடி போஸ், திருவாடானை பால்ச் சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலா ளர் கலையரசன் கோரிக்கை களை வலியுறுத்தி பேசினார். இதில் மார்க்சிஸ்டு கம்யூ னிஸ்டு மாவட்ட செயலாளர் கோவிந்தசாமி, தாலுகா செய லாளர் ராஜ்குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.